ஆண்டுகளாக கேட்டோம், வரவில்லை என்று அந்த ஜமாத்திலிருந்து ஒட்டுமொத்தமாக மக்கள் வந்து கேட்கிறார்கள். 'ஒருவருக்கு 95 வயது இருக்கும். அவர், 'நான் கிட்டத்தட்ட 20 வருடங்கள் 30 வருடங்களாகக் கேட்கிறேன், கிடைக்கவில்லை. அந்தப் பாலத்தைப் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுத்துவிட்டார்கள்' என்று சொல்லி, அவர்கள் நேரடியாக எம்.எல்.ஏ. ஹாஸ்டலுக்கு வந்து 'என்னுடைய வாழ்நாளிலேயே கண்ணாலே பார்த்துவிடுவேன்' என்று வாழ்த்திவிட்டுப் போனார்கள். அவரும் அம்மா அவர்களுக்கு நன்றி சொல்ல வேண்டும் என்றார். அவர் சார்பாகவும், மதுரை கிழக்குத் தொகுதி மக்களின் சார்பாகவும் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 357, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

357—

பாசன வசதி

***3583—திரு. ஆ. நாராயணன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி கால்வாயில் தடுப்பணை கட்டி, புறவழிக் கால்வாய் அமைத்து பாசன வசதியை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) நாங்குநேரி தொகுதி, நாங்குநேரி கால்வாயில் தடுப்பணை கட்டி மேல்வாய் வழியாக கால்வாய் வெட்டி பாசன வசதியைப் பெருக்கிட அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை இங்கே எழுப்பியுள்ளார்கள். திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், நாங்குநேரியன் கால்வாயை அகலப்படுத்தி, இக்கால்வாயிலிருந்து புதிதாக ஒரு கால்வாய் அமைத்து, அதன்மூலம் 46 குளங்களுக்குப் பாசன வசதி அளிக்க இத்திட்டம்

2013 ஏப்ரல் 30]

வழிவகை செய்கிறது. நாங்குநேரியன் குளத்திற்கு முன்னே, நாங்குநேரியன் கால்வாயிலிருந்து புதிதாக ஒரு கால்வாய் 20.55 கிலோ மீட்டர் தூரத்திற்கு அமைத்து, அதன்மூலம் 46 குளங்களுக்கு வெள்ளக் காலங்களில் நீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் 46 குளங்களுக்குக் கீழுள்ள 9,118 ஏக்கர் நிலங்கள் பயனடையும். மேலும், இப்பகுதியிலுள்ள 450 கிணறுகளில் நிலத்தடி நீர்மட்டம் உயரும் வாய்ப்பும் உள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்த 9.24 ஏக்கர் பட்டா நன்செய் நிலங்களும், 119.06 ஏக்கர் பட்டா புன்செய் நிலங்களும், 24.4 ஏக்கர் புறம்போக்கு நிலங்களும் கையகப்படுத்தப்படவேண்டும். இந்தத் திட்டத்தின் முக்கிய கூறுகள், தற்போதுள்ள நாங்குநேரியன் கால்வாயை அகலப்படுத்த வேண்டும். புதிதாக 20.55 கிலோ மீட்டர் தூரத்திற்கு கால்வாய் அமைத்தல் ஆகிய பணிகளைச் செய்ய வேண்டியுள்ளது. இந்தத் திட்டத்திற்கான மதிப்பீடு 171 கோடி ரூபாயில் தயாரிக்கப்பட்டு, துறையின் கூர்ந்தாய்வில் உள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.

திரு. ஆ. நாராயணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு மிக்க நன்றி. நாங்குநேரி கால்வாயிலிருந்து புறக்கால்வாய் அமைத்தால், 46 குளங்கள் பாசன வசதி பெறும். மேலும், சுமார் 9,000 ஏக்கருக்கு மேலான மானாவாரி நிலங்கள், நஞ்சை நிலமாக மாறும். இதனால் விவசாயம் பெருகி, அந்தப் பகுதி மக்கள் பெரும் பயன் அடைவார்கள். மேலும், அந்தப் பகுதிகளில் நிலத்தடி நீர் மட்டம் உயரக்கூடும். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களின் ஆலோசனையைப் பெற்று இந்தத் திட்டத்தினை நிறைவேற்றினால் அந்தப் பகுதி மக்களின் 60 ஆண்டுக்கால கோரிக்கைகள் நிறைவேறும் என்பதாலும், இதன்மூலம் அப்பகுதி மக்கள் மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்களை எக்காலத்திலும் மறக்காமல் போற்றி வணங்குவார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாக இத்திட்டத்தினை நிறைவேற்றிட நடவடிக்கை எடுப்பார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் தயாரிக்கப்பட்டு, அதனுடைய பலன்கள் எல்லாம் சரி பார்க்கப்பட்டு, கூர்ந்தாய்வில் இருக்கிறது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. நாராயணன் அவர்கள்.*

திரு. ஆ. நாராயணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்கள் சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும், தலைவர் சார்பாகவும், என் சார்பாகவும், என் தொகுதி மக்களின் சார்பாகவும் நன்றி கூறி அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 358, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி.எச். சேகர், மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.*

358—

கால்நடை மருந்தகம்

***3237—திரு. சி.எச். சேகர்:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பூரிவாக்கம் பகுதியிலுள்ள கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா, கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கும்மிடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் ஒன்றியம், பூரிவாக்கம் கிராமத்திலே கால்நடை மருந்தகத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு ஆவன செய்யுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர்